கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.19/2017

பி.வா.சா.2 - குமார்

நாள். 20.01.2026 த/பெ - செல்லையா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் நான் துணை வட்டாட்சியராக பணி புரிகிறேன். ரோஸ்மியாபுரத்தில் உள்ள எந்த நிலத்திற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கின் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்து தென்வடல் தெரு என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தின் உட்பிரிவுகள் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.6 புலவரைபடத்தில் வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் சர்வே எண்.1069/23 ல் உள்ளது. மேற்படி சர்வே எண்.1069/23 அ பதிவேட்டில் யார் பெயரில் உள்ளது என்றால் தெரு என உள்ளது.

2) அ பதிவேடு குறிப்புரையில் யார் பெயர் உள்ளது என்றால் பெயர் ஏதும் குறிப்பிடப்படவில்லை, எனக்கு பெயர் ஏதும் தெரியவில்லை. இவ்வழக்கு பிராதில் வழக்கு சொத்தின் எல்கைகள் குறிப்பிடப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கு பிராதில் தபசில் சொத்தில் கிழமேல் பொது பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது, தென்வடல் பாதை என குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.1069/23 என்பது தென்வடல் தெரு அது வழக்கு சொத்திற்கு கிழக்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் பொது பாதை ஆனது தென்வடல் மற்றும் கிழமேலாக அமைந்துள்ளது.

3) CSI சர்ச் அரசை எதிர்த்து வழக்கு தொடர்ந்து அது பாதை இல்லை எனவும், CSI சர்ச்க்கு பாத்தியப்பட்ட இடம் எனவும், முழுவிசாரணைக்கு பிறகு தீர்ப்பாகி அதன்பிறகு நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு வாழ்விப்பு செய்து கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வாதிக்கு சார்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்,



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.01.20 15:11:07 +0530

வழக்கு சொத்தானது CSI சர்ச்க்கு பாத்தியப்பட்ட சொத்து அது பாதை அல்ல என்றாலும் சரியல்ல. நான் சர்வே எண்.1069/23 என்பது CSI சர்ச்க்கு கிழக்கு பக்கம் செல்லுகின்ற தென்வடல் பாதையை CSI சர்ச்னுடைய சொத்துடன் சேர்த்து பாதை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.1069/23 க்கும் CSI சர்ச்க்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

(1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

(2ம் பிரதிவாதி மற்றும் வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.01.20 15:11:12 +0530